முரசு 3

# தமிழ் முரசு

ஒலி 3

TAMOUL MOURASSOU

ஐது 1985

## தமிழ் ஈழம் தவிர்க்க முடியாதது.




## ஈழ மக்களின்
## இரத்தச் சிதறல்கள் மீது சத்தியம்
## ஈழம் என்பது உறைந்த முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 39

## வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இரத்தவெறி பிடித்த சிறீலங்கா அரசின் கூலிப்படைகள் இன்று ஈழத்தை இரத்தக் காடாக்கியுள்ள இந்த வேளையில்... கர்ப்பிணிகள் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டு, குழந்தைகள் உயிரோடு எரிக்கப்பட்டு, மழலைச்செல்வங்களும், முதியோரும் வெட்டியும் சுட்டும் கொல்லப்படும். ஈழமக்களின் உடமைகள் சூறையாடப்பட்டும் சுட்டெரிக்கப்பட்டும் ஆக்கிரமிப்புப்படைகள் ஈழ பூமியை மயானக்காடாக்கி பேயாட்டம் போடும் இந்த வேளையில்.... ஈழமக்கள் தம் சொந்தமண்ணில் அகதிகளாக... தம் சொந்த நகருக்குள் புகுவதற்கு ஆக்கிரமிப்பாளரிடம் அனுமதி வேண்டி வேண்டிய அவல நிலைக்கு வந்தவர்களாக, தம் சொந்த வீட்டில் வதிவதற்கு அச்சம் கொண்டவர்களாக வாழ்வா சாவா எனக் கலங்கித் தவிக்கின்ற இந்த வேளையில்.... அன்றாட வாழ்க்கை தகர்ந்தவர்களாய், அடுத்த வேளை உணவை எண்ணிக் கலங்கியவர்களாய்... அடுத்த சுவாச மூச்சுக்கு உத்தரவாதம் இல்லாதவர்களாய்... இருப்பதற்கு ஏதுவுமே இல்லாதவர்களாய் ஈழ மக்கள் சாவை முத்தமிட்டு நிற்கும் இந்த சந்தர்ப்பமிக்க வேளையில்......

தமது கருத்துக்குச் சரி என்றவகையில் ஈழவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த [illegible] த்தொண்டர்கள் சக இயக்கம் ஒன்றினால் கோரத்தனமாக [illegible] [illegible] சிதைக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்ட [illegible] சுழிபுரத்தில் நிகழ்ந்துள்ளது. இந்தக் கொடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைச் செய்த இயக்கம் எதுவாக இருந்தாலும் இக்கொலைக்கு அவர்கள் கூறும் காரணம் எதுவாக இருந்தாலும் பாசிச அரசின் கொடுங்கோலாட்சியை ஒத்த இந்த பாதகச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஈழத்தின் எந்தப் பிரதேசத்திலும் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை சகல இயக்கங்களுக்கும் உண்டு. இதை எந்த ஒரு இயக்கமும் தடுக்கவோ அல்லது ஈழமண்ணின் எந்த ஒரு பிரதேசத்தையும் சொந்தங் கொண்டாடவோ முடியாது. இத்தகைய சிந்தனை இக்கொலைச் செய்தவர்களுக்கு இருந்தால் இவர்களுக்கும் சிறீலங்காவின் ஆட்சியாளர்களுக்கும் இடையில் அதிகவித்தியாசம் இருந்துவிட முடியாது.

எல்லாவற்றையும் விட ஈழவிடுதலை இயக்கங்களும், போராளிகளும் தமக்கிடையே ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளை கலந்துரையாடல்கள் மூலமே தீர்க்க வேண்டும் என்ற கருத்தை திட்டவட்டமாகக் கொண்டவர்கள் நாம். எதிரியை நோக்கி திரும்பவேண்டிய ஆயுதத்தை போராளிகளை நோக்கித் திருப்பும் மதியீனத்தை நாம் மீண்டும் கண்டித்து இக்கொடிய செயலுடன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனவும் வேண்டுகிறோம்.

விடுதலைப் போராட்டத்திற்கான தமது பங்களிப்பை செலுத்த ஆரம்பித்த கட்டத்திலேயே... மிக இளமையிலேயே... சிந்திக்கத் தெரியாதோரால் சிதைக்கப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்தினைச் சேர்ந்த அந்த இளம் தோழர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் இந்த பாவச் செயலை செய்தவர்கள் யாராக இருப்பினும் இச்செயல் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கும், ஈழமக்களிற்கும் அவர்கள் செய்த பெருந்துரோகம் எனக்கூறி எமது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணையும் பேரவை

வரலாறு புரட்சிகரமான ஒரு தீர்மானத்தை எடுக்க பேரவையைத் தூண்டியுள்ளது. சிக்கலான பரிமாணங்களை ஈழவிடுதலைப் போராட்டம் தொட்டு நிற்கும் இவ்வேளையிலே விடுதலைப் பேரவையானது ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக இயங்கும் தனது முறையிலிருந்து ஒருபடி மேலே சென்று ஈழமக்களின் போராட்டத்தை ஒரு புரட்சிகர கட்சி அமைப்பின் மூலம் மக்கள் போராட்டத்தின் பங்காளர்களாக்கி, சர்வதேச சோசலிச சக்திகளுடன் கூட்டுக்கொண்டு அவற்றின் துணையுடன் முன்னெடுக்க முயலும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து இயங்குவதென்றும் இதன் மூலம் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்கள் இணைந்து அமைத்த ஐக்கிய முன்னணிக்கு மேலும் வலுவூட்டுவது என்றும் தீர்மானித்துள்ளது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேலைத்திட்டங்களையும் ஐக்கிய முன்னணியின் வேலைத்திட்டங்களையும் பேரவை தொடர்ந்து முன்னெடுக்கும்.

இதுவரைகாலமும் பேரவையின் செயற்பாடுகளில் பங்கெடுத்தும், ஆதரவளித்தும் வந்த தோழர்கள் தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்திட்டங்களை பேரவை செயற்படுத்த தமது மனப்பூர்வமான ஆதரவை அளிப்பார்கள் என நம்புவதுடன் அனைத்துத் தோழர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★★★ ☆☆☆ ★★★ ☆☆☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தொடர்ந்தும் இரத்தவெள்ளத்தில்

இன்று சிறீலங்காவின் பாசிச அரசு ஈழத்தின் மீதும் ஈழமக்களின் மீதும் நேரடியாகவே யுத்தப் பிரகடனத்தைச் செய்துவிட்டது. பாசிசப் படைகளின் வெறியாட்டம் ஈழத்தை தொடர்ந்தும் இரத்தவெள்ளத்தில் மூழ்கச் செய்துள்ளது. மன்னார் முதல் முல்லைத் தீவுவரை உள்ள கடற்கரைப் பிராந்தியங்கள் மனித நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசங்களாக ஆக்கிரமிப்பாளரால் பிரகடனம் செய்யப்பட்டு இன்று பத்திரிகைத்துறைக்கும் விலங்கிடப்பட்டுவிட்டது. ஈழமக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு தேடுதல் வேட்டை என்ற பெயரில் மனிதவதை தொடர்கிறது. இனவெறி ஊட்டப்பட்ட பேரினவாதக் காடையர்களுக்கு ஆக்கிரமிப்பு அரசு ஆயுதங்களை வழங்கி ஈழத்தின் எல்லைகளில் இனக் கொலைகளை கட்டவிழ்த்து விட்டுவிட்டது. இத்தகு கொடுமை நிகழ்வுகளை எதிர்கொண்டு முறியடிப்பதற்கோ இன்றும் பல நூறு ஈழமக்களின் உயிர்கள் பலிக்கப்பட்டுவிடும் நிலை.

பாசிசப் படைகளின் துப்பாக்கிகள் தொடர்ந்து அப்பாவி மக்களின் உயிர்களைச் சூறையாடுகின்றன. மக்களின் உயிர் மாத்திரமல்ல பெண்களின் மானமும் சேர்த்து சூறையாடப்படுகிறது. ஈழத்திற்கான உணவு விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் கடும் பஞ்சத்திற்குள் தள்ளப்பட்டுள்ள ஈழமக்கள் பலர் இலைகளையும் தழைகளையும் அவித்து உண்ணும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் சில நாட்களில் பலர் பஞ்சத்தால் இறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவார்கள் என நிலைமையை நேரில் கண்ட லண்டன் ரைம்ஸ் தினசரி நிருபர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே கிளிநொச்சி பாரதிபுரத்தில் உள்ள அகதிகள் முகாமில் பட்டினியால் இருபேர் இறந்துவிட்டனர். இந்த சோகம் பெருமளவில் தொடரும் நிலை வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் உணவுப் பொருட்கள் இல்லை. மண்ணெண்ணை இல்லை. விரைவில் உயிருடன் மனிதர்கள் இல்லாத நிலை வந்துவிடும். 7.12.84 அன்று முல்லைத்தீவில் தண்ணீர் அள்ளச் சென்ற பெண் ஒருவரும் இயற்கைக் கடனைக் கழிக்கச் சென்ற இருவரும் ஆக்கிரமிப்பு அரசபடைகளால் கொல்லப்பட்டனர். அரசாங்கத்தால் ஆயுதங்கள் வழங்கப்பட்ட சிங்களக் காடையர்கள் 6.12.84 இல் வவுனியா ஆச்சிபுரத்தில் நடத்திய வெறியாட்டத்தில் 5பேர் கொல்லப்பட்டனர் 6பெண்கள் 2குழந்தைகள் உட்பட 12 பேர் படுகாயப்படுத்தப்பட்டனர். 13.12.84 இல் நாவற்குழிப் பாலம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. 24.12.84 கரையம்பதியில் நடந்த தேடுதல் வேட்டையில் 25பேர் கைது செய்யப்பட்டனர்.



நரவேட்டைக்காக உலாவரும் சிங்கள வெறிநாய்கள்.

பருத்தித்துறை சப்பா கிராமத்தைச் சேர்ந்த 71குடும்பத்தினர் தமது பெண்கள் ஆக்கிரமிப்புப்படையினரால் மானபங்கப்படுத்தப்படுவதற்கு அஞ்சி கிராமத்தைவிட்டு வெளியேறியுள்ளனர். 19.12.84 க்குப்பின் வவுனியாவில் சிங்களக் காடையரின் வெறியாட்டம் 136குடும்பங்களை அகதிகளாக்கியுள்ளது. செட்டிகுளத்தில் கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டு 81குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட 100பேரைக் காணவில்லை. கிளிநொச்சியில் தினமும் இராணுவச் சோதனை இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர். 26.12.84 அன்று வவுனியா பெரிய புளியாலங்குளத்தில் சிங்கள இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையில் ஒரு இளைஞன் கொல்லப்பட்டார். 12 வயதுச் சிறுவன் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டனர். 27.12.84 அன்று அனுக்காயில் நடந்த தேடுதல் வேட்டையில் 55வயதுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவர் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டனர். வடக்கில் ஏற்கனவே உள்ள 6 இராணுவ முகாம்களுடன் மேலும் 4 இராணுவ வதை முகாம்களை திறக்கவும், வவுனியாவிற்கு இராணுவத் தலைமை முகாமை மாற்றவும் சிறீலங்கா தீர்மானித்துள்ளது. வல்வெட்டித்துறையிலிருந்து பருத்தித்துறை வரையிலான கரைப்பிரதேசத்தில் குடியிருந்த செம்படவர்கள் ஆக்கிரமிப்புகளின் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். 23.12.84 காலை யாழ். பஸ்நிலையத்தில் பாசிசப்படைகள் நிகழ்த்திய வெறியாட்டத்தில் 43வயதுடைய சிவராசாவும் அவரது 10வயது மகனும் கொல்லப்பட்டனர். ஐவர் படுகாயமடைந்தனர். கடைகள் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன. தேடுதல் வேட்டையின் போதும் பல இடங்களில் நகைகளும், பணமும் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ் கே.கே.எஸ் வீதியில் 45வயது பிச்சைக்காரியும், தொண்டமனாற்றில் இளைஞன் ஒருவனும் ஆக்கிரமிப்பாளரின் துப்பாக்கிக் கிரையாயினர். கொக்கடிச் சோலையில் 10 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். வடக்கின் பல இடங்களில் தோட்டங்களிலிருந்து மரக்கறிகள் வீழ்த்தப்பட்டு படையினரால் சேதப்படுத்தப்பட்டது. வீடுகள் தெருக்களெல்லாம் தாக்கப்பட்டன.

4.12.84 அன்று பேரூந்துகளின் கண்ணிவெடிக்கு 1 சிறீலங்கா இராணுவத்தினர் பலியாகி 5பேர் படுகாயமடைந்ததும் பாசிசப்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். முருங்கன் தபால் நிலைய அலுவலர்கள் 9 பேர் வரிசையாக நிற்கவைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மன்னாரில் பாசிசப்படையினரின் வெறியாட்டம் 100பேரின் உயிரைப் பலிவாங்கியது. திருகோணமலையில் உள்ள தென்னைமரத்தடி எனும் கிராமத்தில் பல குடிசைகள் சிங்களக் காடையரால் தீக்கிரையாக்கப்பட்டன. 9.12.84 இல் கொண்டாவிலில் தோட்டத்தில் வேலை செய்த பெண் உட்பட 3பேர் வெறிநாய்களின் துப்பாக்கிக்கு இரையாகினர். யாழ். கஸ்தூரியார்வீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசல்லாவையைச் சேர்ந்த செல்வம் இராஜதுரைத் தாய் சுட்டுக் கொல்லப்பட்டார். வடக்கில் இரு தினங்களில் 1000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் 600 பேர் கப்பலில் ஏற்றப்பட்டு வதைமுகாம்களுக்கு தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

13.12.84 அன்று புசல்லாவையில் மலையகத் தொழிலாளரின் தோட்டலயன்கள் சிங்களக் காடையரால் தீக்கிரையாக்கப்பட்டது. 12, 13 தினங்களிலும் சிறீலங்கா இராணுவம் பண்டத்தரிப்பில் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் 12 பேர் கொல்லப்பட்டனர். பெண்கள் உட்பட 800 பேர் கைது செய்யப்பட்டனர். சில்லாலை, பணிப்புலம் பகுதியில் பல வீடுகள் இந்த வெறிபிடித்த மிருகங்களினால் தீக்கிரையாக்கப்பட்டன. வவுனியாவில் அகதிகள் முகாம்களும் சிங்களக் காடையரினால் தீக்கிரையாக்கப்பட்டு மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்தப் பாசிசப்படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் 40 பேர் கொல்லப்பட்டனர். 400 பேர் கைது செய்யப்பட்டனர்.

13.12.84 அன்று மன்னாரில் காரில் வந்த இருவரானவர் ஜெயராசலிங்கம், யேசுதாசன் (பொலிஸ்) கார்ச் சாரதி ஃபாரூக் ஆகியோர் உயிருடனேயே காரினுள் வைத்து பாசிஸ்டுகளால் தீமூட்டிக் கொல்லப்பட்டனர். திருநெல்வேலியில் 22 வயதுடைய எட்டு மாதக் கர்ப்பிணிப் பெண் தனது 4 வயது மகன், தாய், தகப்பன் ஆகியோரின் முன்னால் சிறீலங்காவின் வெறிநாய்களால் துடிக்கத் துடிக்க கற்பழிக்கப்பட்டார். இச்சம்பவத்தில் மூன்று குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. சுழிபுரம் பகுதியிலும் தேடுதல் வேட்டையின் போது பல பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். திருநெல்வேலியிலும் 3 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவிலில் புகையிரதப்பாதை தகர்க்கப்பட்டுள்ளது. பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஞானப்பிரகாசம் 25.12.84 அன்று ஆனைக்கோட்டையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். மன்னாரில் இராணுவ வெறியாட்டம் 100 பேரைப் படுகொலை செய்து 12,000 பேரை அகதிகளாக்கியுள்ளது. மன்னார் உள்ள வங்காலை கிராமத்தில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த விசேட இராணுவம் மதகுருவையும் 25 இளைஞர்களையும் கோரத்தனமாக கொன்றுகுவித்துள்ளது.



இன்று ஈழமக்களைக் கொன்றழிக்கும் இந்தத் துப்பாக்கிகள் நாளை உங்களை நோக்கியே திசைதிரும்பும் வெறிநாய்களே!

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் இருவர் உட்பட 10 பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கொக்கிளாயில் தேடுதல் வேட்டையின் போது 42 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஈழ மக்களுக்கெதிராகவும் ஈழ தேசத்திற்கெதிராகவும் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்ட ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது. ஈழமக்கள் மீது சகல நெருக்குவாரங்களையும் சுமத்த பாசிச அரசு தீர்மானம் கொண்டுள்ளது.

எங்கு தடைகள் வரினும், கொடுமைகள் குவிந்த போதும் போராட்டம் தொடரும், புதிய ஈழம் மலரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மக்களின் இரத்தச் சிதறல்கள் மீது சத்தியம் ஈழம் என்பது முடிந்த முடிவு

"கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை"யினை மார்க்சும் ஏங்கல்சும் 1848-ல் வெளியிட்டதில் இருந்து இன்றுவரை புரட்சிகர மார்க்சியத்திற்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் இடையில், அரசியல் மற்றும் தத்துவார்த்த அரங்குகளில் நடைபெறும் போராட்டம் ஒரு பிரச்சினையை சுற்றி மையம் கொண்டுள்ளது; சமுதாயத்தை ஒரு சோசலிச அடிப்படைக்கு மாற்றுவதற்கு புரட்சி தேவையா, இல்லையா? புரட்சியை நடத்தி நிறைவேற்றுவதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றனவா, இல்லையா? சமாதான வழியில் அதை நடத்தி நிறைவேற்ற முடியுமா? அல்லது புரட்சிகரப் பலாத்காரம் தவிர்க்க முடியாதது?

சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையிலான முரண்பாடுகள்தான் முதலாளித்துவ சமுதாயத்தினை மறுக்கவும் மறைக்கவும் முடியாத முரண்பாடு என்ற உண்மையைப் பொய்யாக்குவதற்காகவும், வரலாற்றில் உழைக்கும் மக்களின் இடத்தையும் பாத்திரத்தையும் மறுப்பதற்காகவும், மனித சமுதாயத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் தீர்மானகரமான அம்சமாக இருப்பது வர்க்கப் போராட்டமே என்பதையே மறுப்பதற்காகவும், பூர்சுவாக்களும் சந்தர்ப்பவாதிகளும் தங்களுடைய சித்தாந்தங்களைக் கொண்டு மறுப்பதற்கு எப்போதும் முயன்று வந்திருக்கின்றனர். பாட்டாளி வர்க்கத்தை சித்தாந்தரீதியில் திசை திருப்புவதும், புரட்சிக்குத் தடை விதிப்பதுவும், முதலாளித்துவ சுரண்டலை நீடிக்கச் செய்வதும், புரட்சியினுடையதும், சோசலிசத்தைக் கட்டியமைப்பதனுடையதும் வெற்றிகரமான விஞ்ஞானமாகிய மார்க்சிச-லெனினிசத்தை அழிப்பதும் எப்போதும் அவர்களுடைய இலக்காக இருந்து வந்திருக்கின்றது.

பாட்டாளி வர்க்கத்தினதும், புரட்சியினுடையதும் இந்த அனைத்து [illegible] விரோதிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சிசம், லெனினிசம் காலாவதியாகிவிட்டது என்று பிரகடனம் செய்வதற்கும், புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கும், முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் பொதுவாக மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்றவை என்று சொல்லப்படும் பல்வேறு வகைகளிலான 'தத்துவங்களை' திருத்தப் புகுந்து முயன்றிருக்கின்றனர்.

மார்க்சிய-லெனினிசக் கட்சிகளையும், புரட்சியாளர்களையும், பாட்டாளி வர்க்கத்தினது போராட்டங்களை தோற்கடிக்கவும், தேசவிடுதலைப் போராட்டங்களை நசுக்கவும் தொடர்ச்சியாக இத்தகைய சதிகள் கட்டவிழ்த்து விடப்பட்டு வந்துள்ளதை வரலாறு எமக்குக் காட்டுகிறது. இன்று ஈழ விடுதலைப் போராட்டமும் இத்தகைய சதிகளால் சூழ்ந்து வளைக்கப்பட்டிருக்கிறது. ஈழத்தை [illegible] முடிவாகவும், மார்க்சிச-லெனினிசத்தை போராட்டத்தின் அடித்தளமாகவும், தன்னைச் சுற்றியுள்ள தேசிய நோக்கைத் தகர்த்தெறிந்து இன்று ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டமாக ஈழப்போராட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ள இந்த வேளையிலே சில சக்திகள் அடக்குமுறையாளருடன் பேச்சுவார்த்தைக்குப் போதல், தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை வெறும் அதிகாரங்கள் கொண்ட மாநில சுயாட்சிக்கு அடகு வைத்தல் போன்ற வறுமையான உச்சாடன மந்திரங்களை ஜபிக்க ஆரம்பித்துள்ளன. ஈழப் போராட்டத்தின் அம்சங்களைக் கொச்சைப்படுத்தி போராட்டத்திற்கு குழிபறிப்பதில் தம்மை மார்க்சிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டவர்களும், மார்க்சிச-லெனினிசத்தை தம் வாழ்நாளில் ஒரு சொல்லில் கூட ஏற்றுக் கொள்ளாதவர்களும் கைகோர்த்து இணைந்தே ஈடுபட்டுள்ளனர்.

இது எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. இத்தகைய பல்வேறு சதிகளுக்கு எதிராக பாட்டாளிகளும், புரட்சியாளர்களும், தேசவிடுதலை இயக்கங்களும், அவர்களுடைய உண்மையான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சிகளும் சற்றுமே விட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடாத உறுதியான போராட்டத்தை எப்போதுமே நடத்தி வந்திருக்கின்றனர். எனவே இத்தகைய சதிகளால் ஈழப் போராட்டம் நின்று விடப் போவதில்லை.

நமது தத்துவமாகிய மார்க்சிச-லெனினிசமானது ஒரு வறட்டுக் கோட்பாடு என்றும்; அது இறுகிப் போன கல்லாக மாற்றப்பட்ட ஏதோ ஒன்று என்றும் விறுவிறுப்பான செயல் ஊக்கமும் உயிர்த்துடிப்பும் நிறைந்துள்ள இன்றைய காலகட்டத்தின் உண்மை நிலைகளுக்குத் தன்னை ஈடுகொடுத்துக் கொள்ள இயலாத ஒன்று என்றும் நமது தத்துவத்திற்கு லேபல் ஒட்டுவதற்கு ஈழவிடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி அடக்குமுறையாளர்களுடன் சமரசத்தை மேற்கொள்ள முயலும் பூர்சுவாக்கள் முயல்கின்றனர். ஆனால் உண்மையில் துடிப்பான செயல் ஊக்கம் பற்றியும் உயிர்த்துடிப்புப் பற்றியும் பேசுவோமானால் மார்க்சிச-லெனினிசத்திற்குத்தான் இந்தக் குணம்சங்கள் இருக்கின்றன; ஏனென்றால் இது சமுதாயத்தின் மிகவும் முன்னேற்றமடைந்த வர்க்கமாகிய, மிகவும் புரட்சிகரமான வர்க்கமாகிய, சரியாகச் சிந்திக்கும் வர்க்கமாகிய, பொருள் நலன்கள் யாவற்றையும் உற்பத்தி செய்கின்ற வர்க்கமாகிய, எப்போதும் செயலூக்கமுள்ள வர்க்கமாகிய உழைக்கும் வர்க்கத்தின் சித்தாந்தமாக இருக்கிறது.

மார்க்சிச-லெனினிசமானது காலாவதி ஆகிவிட்டது என்றும், நவீன காலத்திற்குப் பொருந்தாது என்றும், மனித சமுதாயத்தை நம்பவைக்க முயன்று கொண்டிருக்கும் பூர்சுவாக்களுடைய முயற்சிகளும் ஈழ தேசத்தின் மீட்புப் போராட்டத்தை மாநில சுயாட்சி முறைக்கு விற்க முயலும் சந்தர்ப்பவாதிகளுடைய முயற்சிகளும், பாட்டாளி வர்க்கத்தின் விஞ்ஞான சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடும் நோக்கமும், இந்த சித்தாந்தத்தை மாற்றி விட்டு அதனுடைய இடத்தில், சிதைந்து சீரழிந்து கீழ் நிலையை எட்டிய வாழ்க்கையை, தங்குதடைகள் அற்ற சீரழிவுச் சமுதாயத்தை, நுகர்வோர் சமுதாயம் என்று சொல்லப்படும் சமுதாயத்தைக் கொண்டு வந்து வைக்கும் நோக்கம் உடையனவாக இருக்கின்றன. பாட்டாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தின் முற்போக்கான புரட்சிகர சிந்தனைகளுக்கு அரண் கொடுக்கும் நோக்கத்தையும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமாக புதிய பரிமாணங்களைத் தொட்டு நிற்கும் ஈழப்போராட்டத்தை சிதைத்து விடும் நோக்கத்தையும், முதலாளித்துவ ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் நிரந்தரமாக நீடிக்கச் செய்யும் நோக்கத்தையும் உடையன ஆகும்.

எமது சித்தாந்தம், லெனின் நமக்குக் கற்றுத் தருவதுபோல, வர்க்கப் போராட்டத்தின் அமைப்பு முறைகளையும் வழிமுறைகளையும் பற்றி சரியாக புரிந்து நிர்ணயிக்கிறது. வாழ்க்கையிலிருந்து கிளம்புகின்ற, அந்தந்தக் காலகட்டத்திலிருந்து கிளம்புகின்ற நடைமுறைப் பிரச்சினைகளோடு நெருங்கிய பிணைப்பு உடையதாக எமது சித்தாந்தம் இருக்கிறது. இது பூர்சுவாக்கள் சொல்லிவருவதுபோல வெறுமனே ஏட்டறிவும், எழுத்தறிவும் மாத்திரம் இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனித சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையை சரியாக ஆராய்ந்து பார்த்து அதைப் புரிந்து கொள்வதற்கும், சமுதாயத்தின் புரட்சிகர மாற்றத்தை செயல்முறைப் படுத்துவதற்கும் இந்த ஆயுதமானது நமக்கு உதவுகிறது.

இன்று இருளின் பிரதிநிதிகளாகிய பெரிய சக்தி, பாட்டாளிவர்க்கத்தையும், பல்வேறு மக்களையும் அடிமைப் படுத்தியும், சுரண்டுதலையும் செய்யும் பெரியசக்தி அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய ஏவல் நாய்களும். புரட்சிக்கு எதிரான இந்த ஏகாதிபத்தியத்தின் சித்தாந்த நீரோட்டங்களும் ஈழப்போராட்டத்திற்கு ஊறுவிளைவிக்க முயலும் பூர்சுவாக்களின் சித்தாந்த நீரோட்டங்களும் சங்கமமாக ஆரம்பித்துள்ளன. இந்த சங்கமம் இன்று ஈழவிடுதலைப் போராட்டத்திற்கெதிரான சதிகளை சிலந்தி வலைகளாகப் பின்ன ஆரம்பித்துள்ளது.

இந்த அனைத்து எதிரிகளுக்கும் எதிரான எமது போராட்டத்தில், நாம் நம்மை மார்க்சிச-லெனினிசத்தின் மீதும், ஈழவிடுதலைப் போராட்டத்தின் மீதும், உலகப் பாட்டாளிவர்க்கத்தின் மீதும் உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலை பற்றியும் சமகாலத்தில் இருந்து வரும் எல்லா சமூக சக்திகளின் அதாவது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கும் சமூகசக்திகளின் குறிக்கோள்கள் நோக்கங்கள் பற்றியும் நாம் ஒரு சரியான இயக்க இயல் ஆய்வு நடத்தினால் சித்தாந்த மட்டத்திலான நமது போராட்டம் வெற்றியடையும். சர்வதேச சூழ்நிலை பற்றிய விஞ்ஞான ஆய்வும், புரட்சிப் போராட்டத்தின் யுத்த தந்திரம் பற்றிய தெளிவும், ஒரு போரை அடுத்து மற்றொரு போரை வெல்வதற்கு பல்வேறுவகையான சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளிலும் சரியான தந்திரங்களை வகுப்பதற்கு உதவுகின்றன.

எனவே மார்க்சிய-லெனினிச சித்தாந்தத்தை ஆதாரமாகவும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட போராளிகளை மையமாகவும் கொண்ட ஈழப்போராட்டம் சதிகளையும் சந்தர்ப்பவாதிகளின் சாகசங்களையும் சமரசக் கனவுகளையும் தகர்த்தெறிந்து ஈழ தேசத்தை மீட்டுத்தரும் என்ற சத்தியத்தை ஈழமக்களாகிய நாம் எமது நெஞ்சில் எடுத்துக்கொள்வோம்.

இலத்தீன் அமெரிக்காவிலே செங்கொடியைப் பறக்கவிட்டு 1959ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மக்கள் புரட்சி மூலம் ஏகாதிபத்தியத்திற்கு மரண அடியைக் கொடுத்த கியூபா மக்கள் தமது புரட்சியின் 26வது ஆண்டை கொண்டாடுகிறார்கள். இடைவிடாத உழைப்பின் மூலம் ஏகாதிபத்தியத்தின் சதிகளையும், பொருளாதாரத் தடைகளையும் தகர்த்தெறிந்து, சமூகப் பிரச்சினைகட்கு முற்றுப் புள்ளி வைத்து கல்வி, சுகாதாரம், கைத்தொழில் துறை ஆகியவற்றில் வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்று அணிசேராக் கொள்கையையும், உலக சமாதானத்தையும் வற்புறுத்தும் கியூபாவின் மக்களுக்கும் மக்கள் அரசுக்கும் ஈழமக்களின் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தமிழகம் சிறீலங்கா செய்திகள்

**மந்திரிப் பதவியிலிருந்து சிறில் மத்தியூ விலக்கப்பட்டார்.**

சிறீலங்காவின் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரும் தமிழ் மக்களுக்கெதிரான இனவாதத்தைக் கக்குவதற்கு ஜெயவர்த்தனாவின் அரசு இதுவரைகாலமும் பயன்படுத்தி வந்த கருவியுமான சிறில் மத்தியூ மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா ஜனாதிபதி அறிவித்துள்ளார். சர்வ கட்சி மாநாட்டு யோசனைகள் தொடர்பாக பகிரங்கமாக கண்டனங்கள் தெரிவித்திருப்பதன் மூலம் அமைச்சரவை முறைமையான அரசின் மரபுகளையும் விதிமுறைகளையும் மீறியுள்ளார் என்ற குற்றச்சாட்டு இவர்மீது சுமத்தப்பட்டுள்ள போதும் ஜெயவர்த்தன தன்னை உலகுக்கு உத்தமனாகக் காட்ட சிறில் மத்தியூவிற்கு செய்த கழுத்தறுப்பே இது எனக் கருதப்படுகிறது.

**"இலங்கையில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள சிக்கலை இந்தியா புறக்கணிக்க முடியாது..." ...ராஜீவ்.**

"இலங்கை இராணுவத்தினரின் நடவடிக்கை காரணமாக அங்குள்ள இந்திய வம்சாவழியினருக்கும், நாடற்ற தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள சிக்கலை இந்தியா புறக்கணிக்க முடியாது" என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார். "இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழகத்தில் மட்டுமல்லாது நாட்டில் உள்ள அனைவருமே அக்கறை கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்ட ராஜீவ் காந்தி கடந்த சில வாரங்களில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சில இராணுவ நடவடிக்கைகளால் அப்பாவி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி பலர் நமது நாட்டுக்குள் அகதிகளாக வரும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இராணுவமுறையில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வடபகுதி மக்கள் சாவின் மத்தியில் வாழ்க்கை' - தொண்டமான்.

பலகொலைகளும், அடக்குமுறைகளும் தொடரும் வேளையில் சமாதானமும், அமைதியும் இல்லாத நிலையில் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது முடியாத காரியம் எனத் தெரிவித்த தொண்டமான் இன்று படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் வடபகுதியில் தமிழ்மக்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு எதிராக இந்தியா கண்டனம்.

பாக்கு நீரிணையில் இந்திய மீனவர் இருவர் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் சிறீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகி வருவதையும் வன்மையாகக் கண்டித்துள்ள இந்திய அரசு இந்தியாவுக்கெதிரான இலங்கையின் குற்றச்சாட்டுக்களை ஆணித்தரமாக மறுத்துள்ளதுடன் "யுத்த மனோநிலை" ஒன்றை சிறீலங்கா அரசு கட்டியெழுப்புவதாகவும் இந்தியா சாடியுள்ளது.

## 'வன்முறைகளை நிறுத்த இலங்கையை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும்' - கல்யாணசுந்தரம்.

இலங்கையில் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லா உதவிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் விரைந்து அனுப்பப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ள இந்திய வலது கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் கல்யாணசுந்தரம் இலங்கையில் ஆத்திரமூட்டும் செயல்கள் குறித்து கவலை தெரிவித்ததுடன் இம்மாதிரி வன்முறை செயல்களை நிறுத்துமாறு இலங்கையை மத்திய அரசு வற்புறுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கெதிரான இனக்கொலையில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நிறுத்த வேண்டுமென தமிழக சட்டசபை சபாநாயகர் திரு. ராஜாராமும் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுவாஞ்சிக்குடியில் போராளிகளின் தாக்குதலுக்கு எட்டு பொலிசார் பலி.

18.12.84 நண்பகல் பழுகாமம் அம்பிளாந்துறை வீதியில் ஈழவிடுதலைப் போராளிகளால் கண்ணிவெடியொன்றும் மேற்கொண்ட தாக்குதலில் மேற்படி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட எட்டு சிறீலங்கா பொலிசார் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து கூலிப்படையினர் இப்பகுதியில் நடத்திய வெறியாட்டம் 200க்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிர்களைப் பலி வாங்கியுள்ளது.

## பதவியாவுக்கருகில் போராளிகள் மேலும் ஒரு தாக்குதல் செய்தனர்.

19.12.84 காலை புல்மோட்டையிலிருந்து பதவியா செல்லும் வீதியில் சென்ற இராணுவ வாகனம் ஒன்று போராளிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளாகியது. இதில் பயணம் செய்த ஒரு இராணுவ உயர் அதிகாரியும் ஒரு இராணுவவீரரும் கொல்லப்பட்டனர் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர். தொடர்ச்சியான இத்தாக்குதல்கள் அரசபடையினரிடையே பெரும்பீதியை கிளப்பியுள்ளன.

## யாழ் நகரில் ஈழப்பெண்கள் பாசிசப் படையினரின் மானபங்கச் செயல்களுக்கெதிராக ஊர்வலம்.

தேசிய இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கவென வந்த ஆயுதப்படையினர் அராஜகப்போக்கிலாக பெண்களைக் கற்பழித்து வருகின்றனர். இக்காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். வடபகுதியில் தேடுதல் வேட்டை எனும் போர்வையில் அநீதியான செயல்களே நடைபெற்று வருகின்றன என்று யாழ். றிம்மர் மண்டபத்திலிருந்து 21.12.84 அன்று ஊர்வலமாக சென்று யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஆவேசங்கொண்டு எழுப்பிய 500க்கும் அதிகமான தாய்மாரும் கைதுசெய்யப்பட்டவர்களின் சகோதரிகளும் அரசாங்க அதிபரிடம் கையளித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணையில் செல்ல மகேஸ்வரனுக்கு அனுமதி.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையக் குண்டு வெடிப்புத் தொடர்பாக காவலில் வைக்கப்பட்டிருந்த கதிரேசன் எனப்படும் தமிழீழ இராணுவத்தின் தலைவர் மகேஸ்வரன் மூன்று மாதங்களின் பின் இப்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ரேகனின் விசேட பிரதிநிதி சிறீலங்கா விஜயம்! ஜனாதிபதியின் அடுத்த சதி என்ன?

சர்வதேசப் பயங்கரவாதத்தின் தலைவனான அமெரிக்க ஜனாதிபதி ரேகனின் விசேட பிரதிநிதி வேர்னன் வோல்டர்ஸ் சிறீலங்காவுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவர் சிறீலங்காத் தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை என்றும் இராணுவத்தீர்வை இப் பிரச்சினைக்கு காணமுடியாது என்றும் கூறியதுடன் இந்திய அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்துகிறார். அமெரிக்கச் சதியாளர்களின் புதிய நாடகத்திற்கான பின்னணி இதுவாகவே உள்ளது.

## சிறீலங்கா உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவர் 'இயக்கத்தால்' கடத்தப்பட்டனர்.

சிறீலங்கா பொலிஸ் படையின் முக்கிய அதிகாரிகளான ஜெரால்ட் சில்வாவும், கே.ஏ.ஆர். நாணயக்காராவும் யாழ். புகையிரத நிலையத்தில் வைத்து 'இயக்கம்' எனக் குறிப்பிடப்படும் இளைஞர்களால் நவம்பர் 24 திகதி கடத்தப்பட்டனர். இவர்கள் இருவரையும் சிறீலங்கா அரச மீட்க விரும்பின் 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்கப்பாளங்களை தமக்குத் தர வேண்டும் என கடிதமூலம் உதவி பொலிஸ் அதிபர் சந்திரசிங்கத்துக்கு அறிவித்துள்ள இயக்கத்தினர் கடத்தப்பட்ட இரு அதிகாரிகளும் நலமாக இருப்பதை சித்தரிக்கும் வீடியோ நாடா ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரங்களை முறியடிப்போம்

"ஈழ விடுதலைப் போராளிகள் பயங்கரவாதிகள். அவர்களது செயல்கள் காட்டுமிராண்டித்தனமானவை. அவர்கள் வன்முறை விரும்பிகள். கண்ட இடங்களிலெல்லாம் அப்பாவிச் சிங்கள மக்களை அவர்கள் வெட்டியும், சுட்டும் கொன்று குவிக்கிறார்கள். பெண்களையும், குழந்தைகளையும் கண்டதுண்டமாக வெட்டுகிறார்கள். இரத்த வெறி பிடித்த அவர்கள் தமிழ் மக்களைக் கூட விட்டுவைக்கவில்லை. தமிழ் மக்களையும் கொல்கிறார்கள். இவர்கள் இந்தியாவில் பயிற்சி முகாம்களில் பயிற்சி எடுக்கிறார்கள். இவர்களுக்கு பயிற்சியையும் ஆயுதங்களையும் இந்தியா வழங்குகிறது. பயிற்சியை முடித்துக் கொண்ட 5,000 பயங்கரவாதிகள் இலங்கைக்குள் பிரவேசித்துவிட்டார்கள். இவர்கள் பாரிய ஒரு தாக்குதலை நடத்தப் போகிறார்கள். ஜனவரி 14ம் திகதி ஈழத்தை பிரித்து பிரகடனம் செய்யப் போகிறார்கள்....."

இவையெல்லாம் வேறொன்றுமல்ல இன்று ஈழத்தில் ஆக்கிரமிப்பு அரசு நிகழ்த்திவரும் வெறியாட்டங்களிற்கு நேற்றுக் கூறிய கட்டியம். தான் இன்று ஈழத்தில் நிகழ்த்திவரும் நரமாமிச வேட்டையை மூடிமறைக்க விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகளாக்கி தனது குற்றங்களை அவர்கள்மீது சுமத்தி சிறீலங்கா அரசு மேற்கொண்ட திட்டமிட்ட உலகளாவிய பொய்ப் பிரச்சார நாடகம். உண்மையிலே நடந்தது என்ன என்பதை நாம் உலகுக்கு உணர்த்துவோம்.

டொலர், கென் பண்ணைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகள் சிறீலங்கா அரசு பொய்ப்பிரச்சாரம் செய்து வருவதுபோல அப்பாவி மக்களுக்கெதிரான ஒரு தாக்குதல் நடவடிக்கை அல்ல. வெளிக்கடை வதைமுகாமில் விடுதலைப் போராளிகளின் இரத்தத்தைக் குடித்த சிங்கள இனவெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களையும், கொலைக்குற்றவாளிகளையும் மேற்படி தென், டொலர் பண்ணைகளில் குடியேற்றி அங்கு குடியேற்றப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ மக்களை அடித்து விரட்டி இஸ்ரேலிய பாணியில் இன்னுமொரு மேற்குக்கரையை சிறிலங்கா அரசு சிருஷ்டித்திருந்தது. இந்தக் காடையர் கும்பலின் துணையுடன் மெல்ல மெல்ல ஈழமண்ணை விழுங்கும் திருப்பணியை திட்டமிட்டபடி சிறிலங்கா அரசு செய்து வந்தது. இந்தச் சதியை எவ்வித அரசியல் நடவடிக்கைகளாலும் தடைசெய்ய முடியவில்லை. இந்தக் கட்டத்தில் ஈழமண்ணைக் கொள்ளையடிக்கும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலேயே தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தினர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக மேற்கொண்ட தாக்குதலில் அப்பாவி மக்கள் எவரும் கொல்லப்படவில்லை. பேரினவாதக் காடையர்கள் 80 பேர் மாத்திரம் கொல்லப்பட்டனர். அது மாத்திரமல்ல அரசு குறிப்பிட்டது போல போராளிகள் எவரும் கொல்லப்படவில்லை. மாறாக அப்பாவித் தமிழ் மக்கள் 30 பேர் அரசபடைகளால் கொல்லப்பட்டனர்.

இந்திய ஆக்கிரமிப்புப் பற்றியும், இந்தியாவில் ஈழப் போராளிகள் பயிற்சி பெறுவதாகவும் சிறிலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்ட பொய்ப்பிரச்சாரத்தை இந்திய அரசு மறுத்துள்ளதுடன் வன்மையான தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. ஜனவரி 14ம் திகதி ஈழப்பிரகடனம் செய்யப்போவதாக சிறிலங்கா அரசு செய்துவரும் பிரச்சாரம் பொய்யானது அத்தகைய பிரகடனம் எதையும் தாம் செய்யப் போவதாக அறிவிக்கவில்லை என தமிழீழ விடுதலை இயக்க செயலதிபர் ஸ்ரீ. சபாரத்தினம் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களை 9 பேரை பணயக்கைதிகளாக்கி வைத்திருக்கும் சம்பவத்திற்கும் அரசு பிரச்சாரம் செய்வது போல் தமது இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாதென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மறுப்புத் தெரிவித்துள்ளது.

இத்துடன் ஆக்கிரமிப்பு அரசின் பொய்கள் இயல்பில் வவுனியா இராணுவமுகாமில் அப்பாவி கைதிகள் 20பேரை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பி ஓட முயன்ற பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என உலகுக்கு அறிவித்தது. செட்டிக்குளத்தில் பஸ்ஸொன்றை மறித்து அதில் பயணம் செய்த தமிழ்ப்பயணிகள் அனைவரையும் கொன்றுவிட்டு தமிழ்ப்பயங்கரவாதிகள் அப்பாவிச் சிங்களப்பயணிகளைக் கொன்றுவிட்டதாக உலகுக்கு அறிவித்தது. பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்களை தினமும் கொன்று குவித்துக்கொண்டு பயங்கரவாதிகள் கொல்லப்படுவதாக அறிக்கைவிட அரசு அன்றாடந் தொடர்கிறது.

ஆக்கிரமிப்பு அரசின் அப்பட்டமான இப் பொய்ப்பிரச்சாரங்களை இயக்கவேறுபாடுகளை மறந்து ஓரணியில் நின்று முறியடிப்போம். ஈழமக்களின் உண்மைநிலையை உலகுக்கெடுத்துக்காட்டுவதாகச் சிறிலங்கா அரசின் முகமூடியைக் கிழித்தெறிவோம்.




ஜெயந்தன்
மலர்வு: 16.12.1961
உதிர்வு: 4.12.1984

நவாலியைச் சேர்ந்த திரு. திருமதி. சரவணபவான் தம்பதிகளின் புதல்வனாகிய செல்வன் ஜெயந்தன் 4.12.84 அன்று BOULEVARD BOISSIER, MONTREUIL இல் அகால மரணமடைந்துவிட்டார். ஜெயந்தனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது மனவருத்தங்களை துயருடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூ கலிடோனியா

**கனக்கி – KANAKY**




ஆக்கிரமிப்பாளரால் கொல்லப்பட்ட கனக் போராளியின் இறுதி ஊர்வலத்தில் கனக் மக்கள்.

---

நியூ கலிடோனியா - ஆதிக்கத்துக்கு அடங்கி மக்கள் அதிக காலம் இருக்கமாட்டார்கள். அவர்கள் என்றாவது ஒரு நாள் தமது உரிமைகளுக்கான போர்க்கொடியை உயர்த்துவார்கள் என்ப வரலாறு இன்று மீண்டும் பசிபிக் சமுத்திரத்தில் அவுஸ்திரேலியாவிற்கு அண்மையில் உள்ள சிறு தீவான நியூ கலிடோனியாவில் நிரூபித்துள்ளது.

எப்படி இன்று ஈழத்தின் முக்கிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் இந்த மண்ணின் உரிமையாளர்களான ஈழமக்கள் சிறுபான்மையாக்கப்படுகிறார்களோ அதேபோல இந்த மொத்த நியூக்கலிடோனியா தீவின் சுயாதீனக்குடிகளான மெலனேசியன் எனப்படும் கனக் மக்கள் 62,000 ஆக மொத்த சனத்தொகையின் 42% ஆக குறைக்கப்பட்டு விட்டனர். இதன் குடியேற்றப்பட்டவர்களோ பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையினர்களாகிவிட்டனர். தம்மைச் சிறுபான்மையினராக்கி இந்த மண்ணின் நிலக் கனிப்பொருள் வளத்தையும், மண்ணின் செழிப்பையும் சுரண்டும் ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களுக்கெதிராக கனக் மக்கள் போர்க்கோலமெடுத்து உயர்ந்த சுதந்திர தேசக் கோரிக்கையை முன்வைத்து பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு இறுதிக்கட்ட உரையை எழுத ஆரம்பித்துவிட்டனர்.


கனக் மக்களின் சுதந்திரப் போராட்டம் திஜிபாவுவின் தலைமையில் அவர்களது கட்சியான FLANKS இன் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது. ஆதிக்கத்துக்கு முடிவு கட்டும் வகையில் கனக் மக்கள் இன்று தமது நாட்டை ஒரு சுதந்திர நாடாக 'கனக்கி' என தமது பழைய பெயரைச் சூட்டிப் பிரகடனம் செய்துள்ளனர். 'கனக்கி' என்பதன் பொருள் 'மக்கள் நிலம்' என்பதாகும். கனக் மக்களது இந்த சுதந்திர தேசப் பிரகடனம் 1989ம் ஆண்டில் கனக் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பை நடத்த விரும்பிய பிரான்சின் சோசலிச அரசை அதற்கு முன்னரே வாக்கெடுப்பை நடத்தும் நிலைக்கு தள்ளியுள்ளது. பிரான்சின் வலதுசாரிக் கட்சிகள் தொடர்ந்து கனக் மக்களுக்கு எதிராக அவர்களது நியாயமான போராட்டத்துக்கு தடையாகவே உள்ளன.

சமீபத்தில் தீவில் குடியேறியுள்ள ஐரோப்பியர் கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்தாக்குதல்கள் 9 கனக் போராளிகளின் உயிர்களைப் பலிவாங்கியது. இதில் இருவர் கனக்மக்களின் தலைவர் திஜிபாவுவின் சகோதரர்கள். தமது சுரண்டலைத் தொடர கனக் மக்களை அச்சுறுத்துவதன் மூலம் போராட்டத்தை ஒடுக்கச் செய்யலாம் என்று இந்த குடியேற்றவாதிகள் கனவு காண்கின்ற போதும் கனக் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.

வழமைபோல முதலாளித்துவ செய்தி தொடர்பு ஸ்தாபனங்கள் கனக் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக கொச்சைப்படுத்திவரும் போதும் கனக் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்கு ஈழமக்கள் தமது ஆதரவை என்றும் அளிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜிவ்காந்தி



"இலங்கையில் நிலைமை மிக மோசமாக சீர்குலைந்து வருவது குறித்து ஆழ்ந்த கவலை கொள்கிறேன். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன்முறைகள் அளவுக்கு அதிகரித்து அதனால் பெருமளவு அப்பாவி மக்கள் உயிர்ப்பலியாக்கப்பட்டுள்ளனர். கண்மூடித்தனமான கொலையில் பாதுகாப்புப்படைகள் ஈடுபட்டுள்ளன. மக்களின் வழமையான வாழ்க்கை முறை முற்றும் பறித்துவிட்டது."

"இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்..."

-ராஜிவ் காந்தி

ஈழமக்களின்பால் அனுதாபம் கொண்ட இவரை... ஈழ மக்களின் நியாயமான போராட்டத்துக்கு தனதும் தனது நாட்டினதும் தார்மீக ஆதரவை வழங்கும் இவரை, ஈழமக்களின் பிரச்சனைகட்கு அரசியல் தீர்வுகாண முற்படும் இவரை [illegible]கள் தமது பிரதமராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு காணா பேராதரவை அளித்து தெரிவு செய்திட்டிருப்பது அமைதியில் தவித்துக் கொண்டிருக்கும் ஈழ மக்களின் இதயங்களில் சிறிது சந்தோசக் கீற்றைப் பாய்ச்சியுள்ளது.

ராஜீவ் காந்தியின் வெற்றி மகத்தானது. இந்திரா காந்தியைச் சுட்டுக் கொன்றவுடன் வெற்றிக் களிப்புடன் கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு இந்திய மக்களின் ஒருமைப்பாட்டைச் சிதைத்து இந்திய தேசத்தைத் துண்டாட முயன்ற ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவல் நாய்களுக்கும் பேரடி. "இந்திய தேசத்தின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற, இந்திய தேசத்திற்கு எதிரான சக்திகளை முறியடிக்க காங்கிரஸ் கட்சிக்கு அங்கீகாரம் தாருங்கள்" என்ற ராஜீவின் வேண்டுகோளுக்கு மக்கள் பூரண அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

ஆட்சியலில் தூய்மையானவர் எனப் பெயர்பெற்ற ராஜீவ் காங்கிரஸ் கட்சியிலிருந்த ஊழல் பேர்வழிகளை தேர்தலில் போட்டியிடச் செய்யாமல் துணிவுடன் தடை செய்தார். அந்தத் துணிவு தொடர்ந்து இந்திய அரசை தூய்மைப்படுத்த உதவும் என நம்புகிறோம். நவீன தொழில் நுட்பத்தின் மீது ராஜீவ் கொண்டுள்ள ஆர்வம் இந்தியாவில் ஒரு கைத்தொழில் புரட்சிக்கு அடித்தளமாக வேண்டுமென விரும்புகிறோம். அன்னை இந்திராவின் வழியிலே தொடர்ந்து இந்தியா அணிசேரா பாதையிலே சோவியத் யூனியனின் நேச நாடாக, சோஷலிச சக்திகளின் நட்பு நாடாக, ஒடுக்கப்படும் மக்களின் உற்ற துணைவனாக, அனைத்துக்கும் மேலாக ஏகாதிபத்தியத்தின் பெரும் எதிரியாக இட்டுச் செல்லப்படுவதற்கு ராஜீவ் துணைநிற்பார் என நம்புகிறோம். அனைத்தையும் விட ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றியை முத்தமிட ராஜீவின் தலைமையிலான இந்தியா தனது தார்மீக ஆதரவைத் தரும் எனவும் நம்புகிறோம். பேராதரவுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ராஜீவ் காந்தி ஏகாதிபத்தியத்தின் அனைத்துச் சதிகளையும் தகர்த்தெறிந்து பூரண மேம்பாட்டில் இந்தியாவைப் படைக்க ஈழமக்கள் சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேர்தல் முடிவுகள்

## ஒரு பார்வை............

உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் எட்டாவது பொதுத்தேர்தல் ராஜீவ் காந்தியின் தலைமையிலான இந்திரா காங்கிரசிற்கு மகத்தான மாபெரும் வெற்றியைக் கொடுத்துள்ளது. தேர்தல் முடிவுகள் கிடைத்த 500 லோகசபைத் தொகுதிகளில் 394 இடங்களை [illegible] இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. அதாவது ஒவ்வொரு 10 தொகுதிகளில் 8ஐ இந்திரா காங்கிரஸ் கைப்பற்றி வரலாறு காணா பெருவெற்றியை ஈட்டியுள்ளது. இத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் படுதோல்வியடைந்ததுடன் எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் திரு. ராமராவின் தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியின் கை ஓங்கியுள்ளது. 500 தொகுதிகளின் பிரகாரம் கட்சி நிலவரங்கள்...

| | | | |
|---|---|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 394 | காங்கிரஸ் (எஸ்) | 04 |
| தெலுங்கு தேசம் | 28 | தலித் மஸ்தூர் கிஸான் கட்சி | 03 |
| இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | 22 | தேசிய மாநாட்டுக் கட்சி | 03 |
| அ.தி.மு.க | 12 | பாரதீய ஜனதா | 02 |
| ஜனதா | 10 | தி.மு.க | 01 |
| வலது கம்யூனிஸ்ட் கட்சி | 07 | காங்கிரஸ் (ஜே) | 01 |
| | | சுயேச்சை | 15 |

அமெதி தொகுதியில் போட்டியிட்ட பிரதமர் ராஜீவ் காந்தி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மேனகாவையும் 29 சுயேட்சை வேட்பாளர்களையும் படுதோல்வியடையச் செய்து 3 லட்சத்து 14 ஆயிரத்து 878 மேலதிக வாக்குகளால் பெரு வெற்றி பெற்றார். இத்தேர்தலில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் வாஜ்பாய், ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகர், ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், பகுகுண போன்ற தலைவர்கள் தோற்றுப் போனார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களில் சரண்சிங்கும், சொற்ப மேலதிக வாக்குகளால் ஜெகஜீவன்ராமும் மாத்திரம் வெற்றி பெற்றனர். சென்ற தேர்தலில் 16 இடங்களைப் பெற்ற தி.மு.க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை ஒரு இடத்தையும் சென்ற தேர்தலில் இரண்டு இடங்களைப் பெற்ற அ.தி.மு.க. இம்முறை 12 இடங்களையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. கர்நாடகா மாநிலத்தில் ஜனதா கட்சி படுதோல்வியடைந்ததை அடுத்து திரு.ஹெக்டே யின் தலைமையிலான மாநில அரச பதவி விலகியுள்ளது. இத்தேர்தலில் 41 பெண்கள் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கடந்த தேர்தலில் இது 28 ஆக இருந்தது.

தமிழ் நாடு சட்ட சபைக்கான தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அண்ணா.தி.மு.க கூட்டணி அமோக வெற்றியை ஈட்டியுள்ளது. தேர்தல் இடம்பெற்ற 232 தொகுதிகளில் கட்சி விபரம் பின்வருமாறு...

| | |
|---|---|
| அ.அ.தி.மு.க - 133 | கா.கா. காங்கிரஸ் - 02 |
| இந்திரா காங்கிரஸ் - 62 | வ. கம்யூனிஸ்ட் - 01 |
| தி.மு.க - 22 | அ.இ. பார்வர்ட் பிளாக் - 01 |
| இ. கம்யூனிஸ்ட் - 05 | சுயேச்சை - 02 |
| ஜனதா - 03 | |

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் ஆண்டிப்பட்டி சட்டசபைத் தொகுதியில் 32,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். அ.தி.மு.க.வின் விஜயசாரதி, கோவைத்தம்பி ஆகியோரின் தோல்வி குறிப்பிடத்தக்கது. தி.மு.க. தலைவர் கருணாநிதி இத்தேர்தலில் போட்டியிடவில்லை. தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். ஆனால் தி.மு.க.வின் அன்பில் தர்மலிங்கம், துரைமுருகன் ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். தென் சென்னைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட சினிமா நடிகை வைஜயந்தி மாலா ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர் இரா. செழியனை தோற்கடித்துள்ளார். காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் வெற்றி பெற்ற போதும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் தோல்வியடைந்துள்ளார். 'ராஜிவ் பேரலை' எனப் பத்திரிகையாளர்களால் வர்ணிக்கப்படும் இத்தேர்தல் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலே இந்தியாவுக்கு தன்னையே அர்ப்பணித்த இந்திராகாந்தியின் சேவைக்கு மக்கள் அளித்த நன்றியாகும்.

தேர்தல் முடிவுகளையடுத்து தமக்குக் கிடைத்த பெருவெற்றிக்காக பாரத மக்களுக்கு நன்றி கூறிய ராஜீவ் "எமது பொறுப்புக்களை நாம் உணர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும்" என்றும் பெண்களும், வாலிபர்களும் தந்த பேராதரவே இப்பெருவெற்றிக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டதுடன் தன் முன்னால் பல பிரச்சினைகள் இருப்பதாகவும் அதில் முக்கிய பிரச்சினையான பஞ்சாப் பிரச்சினையை தீர்ப்பதே முதல் வேலை என்றும் ராஜீவ் கூறியுள்ளார்.

ராஜீவின் புதிய மந்திரிசபை பல மாற்றங்களுடன் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெளிவிவகார அமைச்சு பிரதமரான ராஜீவ் காந்தியிடமே விடப்பட்டுள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த திருமதி மரகதம் சந்திரசேகர் நல்வாழ்வு சமூகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நீக்கப்பட்டு புதிய நிதியமைச்சராக விஸ்வநாத் பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சு நரசிம்மராவிற்கும் உள்துறை அமைச்சு எஸ்.பி. சவானிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசில் மறைமுகமாக இணை காபினட் ஆதிக்கம் செலுத்தி வந்த தவான் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார். கேரளாவைச் சேர்ந்த அலெக்சாண்டர் பிரதமரின் செயலாளர் ஆவார். தமிழகத்தைச் சேர்ந்த பார்த்தசாரதி வெளியுறவு ஆலோசகராகவும், மேனன், சுவாமிநாதன் ஆகியோர் விசேஷ ஆலோசகர்களாகவும் உள்ளனர்.

இளைய தலைமுறையின் தலைவரான ராஜீவின் தலைமையில் புதுவேகத்துடன் புறப்பட்டிருக்கும் நவபாரதத்தின் புதிய அரசு சோஷலிச சக்திகளுடன் குறிப்பாக சோவியத் யூனியனுடன் கைகோர்த்து புதிய சாதனைகளைப் படைக்கும் என்ற இந்திய மக்களின் நம்பிக்கையை தேர்தல் முடிவுகள் தெளிவாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோழர் உத்சனோவ்

Dmitri F. Ustinov



★★★ ★★★

அக்டோபர் புரட்சி சோவியத் யூனியனில் செங்கொடியை ஏற்றி புரட்சியின் விதைகளை பூகோளத்தின் மேற்பரப்பில் தூவ ஆரம்பித்த நாள் தொட்டு இன்று வரை அந்த புரட்சியின் கருவூலத்தையும் சிவப்பாகி விட்ட அதன் நேசசக்திகளையும் தோற்கடிப்பதற்கான இராணுவ மிரட்டல்களில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனது 'நேட்டோ' கூட்டணியும் தொடர்ச்சியாக முனைந்து வருகின்றன. இந்த வெறிபிடித்த வல்லூறுகளுக்குச் சவாலாக, இராணுவம் என்றால் ஆதிக்க வெறியும் ஆக்கிரமிப்புக் குணம்சமும் கொண்டது என்ற ஏகாதிபத்திய அகராதியின் அர்த்தத்தை மாற்றி புரட்சியை பாதுகாக்க கட்டி எழுப்பப்பட்டதே சோவியத் இராணுவம். சோவியத் இராணுவத்தைப் பற்றிப் பேசும்போது அதைக் கட்டியெழுப்புவதில் தோழர். மார்ஷல். உத்சனோவை ஆற்றிய மகத்தான பங்கினை மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் இராணுவத்தைக் கட்டியெழுப்பிய சிற்பி என்று வர்ணிக்கப்படும் தோழர் உஸ்தினோவ் வொல்கா நகரில் 1908ம் ஆண்டு அக்டோபர் 30ம் திகதி ஒரு தொழிலாள குடும்பத்தில் பிறந்தவர். தன்னுடைய 14வது வயதிலேயே செம்படையில் தொண்டராகச் சேர்ந்தவர். தொழிற்சாலை ஒன்றில் உதிரிப்பாகங்களை திருத்துபவராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் தன்னை ஒரு கம்யூனிஸ்டாக மாற்றிக் கொண்டவர். 1941ம் ஆண்டு இவரது 32வது வயதில் இவர் இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்யும் குழுத் தலைவராக தோழர் ஸ்டாலினால் நியமிக்கப்பட்டார். சோவியத் ஆட்சியை விழுங்க வந்த ஏகாதிபத்தியச் சதிகளை விரட்டியடித்து புதிய இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்து சாதனை படைத்த இவர் 1942ல் 'சோசலிச தொழிலாளர் நாயகன்' என்ற விருதைப் பெற்றார். இவரது அற்புதமான சேவை 1961ம் ஆண்டு மீண்டும் இவ்விருதை இவருக்கு அளித்தது. 1976ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அதியுயர் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட தோழர் உஸ்தினோவ் அடுத்த மாதமே சோவியத் யூனியனின் பாதுகாப்பமைச்சராக நியமிக்கப்பட்டார். இடைப்பட்ட காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுச் செயலாளராகவும் பணியாற்றினர்.

சோவியத் பாதுகாப்பு அமைச்சராக தோழர் உஸ்தினோவ் ஆற்றிய பணி மகத்தானது. ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சமமாக சோவியத் இராணுவத்தைக் கட்டியெழுப்பி தனிமைப்படுத்தி புரட்சிகரத் தன்மையை உடைமையுடன் தோழர் உஸ்தினோவ் நின்றுவிடவில்லை. ஆப்கானிஸ்தானின் புரட்சிகர அரசை கவிழ்க்க முயன்ற ஏகாதிபத்தியச் சதியை சோவியத் இராணுவமே முறியடித்தது. சதிகளால் சுற்றிவளைக்கப்பட்டு நிற்கும் இந்தியாவின் இராணுவத்தை பலப்படுத்த பக்கபலமாயிருந்தார். புவனத்தின் பலபாகங்களிலுமுள்ள புரட்சிகர அரசுகளுக்கு பக்கத்துணையானார். 20.12.1984இல் மறைந்த தோழர் உஸ்தினோவின் சேவைகளை மனதில் பதித்து அவற்றை எமது புரட்சிகர வேலைகளில் கடைப்பிடிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரான்சு

## பிரெஞ்சு ஜனாதிபதிக்கு எதிரான பிரச்சாரத்தில் அமெரிக்க செய்தித் தொடர்புச் சாதனங்கள்.


MITTERRAND

தனது கொள்கைக்கு இணங்கி இயங்க மறுத்ததால் அமெரிக்க ஏகாதிபத்தியம் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரான் மக்களின் ஆதரவை இழந்து வருவதாகவும் பெருத்த அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகி வருவதாகவும் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. இவற்றின் அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மித்திரானின் கொள்கைகள், சோவியத் யூனியனுடன் அதிகரித்து வரும் வர்த்தக மற்றும் இதர பிரான்சின் தொடர்புகள், சமீபத்தில் சாட் படைவிலக்கல் தொடர்பாக லிபியாவுடன் பிரான்சு மேற்கொண்ட ஒப்பந்தம். சிரியாவுடன் பிரான்சின் ஜனாதிபதி நீண்டகாலத்தின் பின் விஜயத்தை மேற்கொண்டு ஏற்படுத்திய தொடர்பு, மூன்றாவது உலகநாடுகளுக்கு நிதிவழங்க முயலும் சோசலிச அரசின் பொருளாதாரக் கொள்கைகள், நிக்கரகுவாவின் மார்க்சியப் புரட்சி அரசு, சல்வடோரின் விடுதலைப் போராளிகள் ஆகியோருக்கான திரு. மித்திரானின் ஆதரவு ஆகியன அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆத்திரத்தைத் தூண்டியுள்ளன. அதேவேளையில் பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் திரு. க்ளோட் செசன் இடத்திற்கு ஜனாதிபதியால் நெருங்கிய ஆலோசகர் டுமாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல் சல்வடோர்

### சல்வடோரின் போராளிகளுக்கு மேலும் ஒரு இராணுவ வெற்றி!

வெற்றியை முத்தமிட்டிருக்கும் சல்வடோரின் விடுதலைப் போராளிகளுக்கு மேலும் ஒரு இராணுவ வெற்றி சமீபத்தில் கிட்டியுள்ளது. தலைநகரான சான் சல்வடோரிலிருந்து 25 மைல்கள் தூரத்திலுள்ள நகரான எல் சவோவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் பயிற்றப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் போராளிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 53 பேர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலின் போது போராளிகள் 104 M-16 ரைபிள்களையும், 6 M-60 இயந்திரத் துப்பாக்கிகளையும், 14000 சுற்று வெடிமருந்தையும் கைப்பற்றியுள்ளனர். விடுதலைப் போராளிகளின் வெற்றிகரமான இத்தாக்குதல் சல்வடோர் இராணுவத்துக்கு பேரழிவைக் கொடுத்துள்ளது.

## வியட்நாம்.

### வியட்நாம் படைகள் கம்பூச்சிய எதிர்ப்புரட்சிப் படைகளை முறியடித்தன.

கம்பூச்சியாவின் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான எதிர்ப்புரட்சிச் சதிகளில் ஈடுபட்டுவரும் எதிர்ப்புரட்சியாளர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் இதர மேற்கத்திய முதலாளித்துவ வல்லரசுகளின் துணையுடன் தாய்லாந்திலிருந்து கம்பூச்சியாவுக்குள் தொடர்ச்சியாக ஊடுருவல் நடத்திவருவது தெரிந்ததே. மூன்று அணிகளாகச் செயற்பட்டுவரும் இந்த எதிர்ப்புரட்சியாளர்களின் தளங்கள் மீது கம்பூச்சிய அரசுக்கு ஆதரவாக கம்பூச்சியாவில் நிலைகொண்டுள்ள வியட்நாம் படைகள் வெற்றிகரமாக தாக்குதல் மேற்கொண்டு மேற் பல தளங்களைக் கைப்பற்றியுள்ளன. இந்தத் தோல்விகண்டு தாய்லாந்திலுள்ள முதலாளித்துவப் பத்திரிகைகள் வியட்நாமுக்கு எதிரான பொய்ப்பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோர்டான்.


### பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர் சுட்டுக் கொலை!



பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் முக்கியதலைவரும், யசீர் அரபாத்தின் தீவிர ஆதரவாளருமான, 1980ம் ஆண்டு இஸ்ரேலியரால் வெளியேற்றப்படும்வரை மேற்குக் கரையின் ஹெப்ரோன் நகரின் மேயருமான ஃபாட் கவஸ்மே (45வயது) ஜோர்டானில் இரு கொலைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இது குறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் விடுத்த அறிக்கையில் இக்கொலைக்கு சிரிய அரசு பின்னணியாக இருந்துள்ளதாகவும் இதனை பாலஸ்தீன விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பிளவுபடுத்தும் சிரியாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கையையும் அரபாத் விடுத்துள்ளார்.

## எதியோப்பியா.

### எதியோப்பிய அரசுக்கெதிரான முதலாளித்துவத்தின் பொய்ப் பிரச்சாரம்.





கொடிய பஞ்சத்துக்கு இரையாகி மடிந்து செல்லும் பல்லாயிரக்கணக்கான ஆபிரிக்க மக்களுக்கு உணவளித்து உயிர்காப்பதை விடுத்து ஆயுத உற்பத்தியில் கோடிக்கான டொலர்களை ஈடுபடுத்தி இன்றும் கோடிக்கணக்கான தொன் கோதுமையை விலைப்பாதுகாப்பு கருதி கடலில் வீசிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய முதலாளித்துவ சகபாடிகளும் பஞ்சத்தில் பரிதவிக்கும் எதியோப்பிய மக்களின் நிலையை மாறுபட்ட கோணத்தில் உலகிற்கு காட்டி சோவியத் யூனியனுக்குச் சார்பான எதியோப்பியாவின் முற்போக்கு அரசை கொடிய அரசாக சித்தரித்துக் காட்டி அதனைக் கவிழ்க்க முயலும் சதிச் செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

## போபாலில் ஒரு பெருந்துயரம்.



84ம் ஆண்டின் பெரும் துயரச் சம்பவம் கடந்த டிசம்பர் மாதம் 3ம் திகதி நள்ளிரவு போபால் நகரில் நடந்தது. முதலாளித்துவம் மூன்றாவது உலகநாடுகளில் தொடர்ந்து சுரண்டும் அதேவேளை அந்நாடுகளில் தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளைக் கூடச் செய்யாது என்பது போபாலில் மீண்டும் நிரூபிக்கப்பட்டது. பாதுகாப்புக் குறைவால் போபாலிலுள்ள யூனியன் காபைட் நிறுவனத்தில் ஏற்பட்ட விபத்து MYTHYL ISOCYANATE எனும் விஷவாயுவை போபால் நகர் பூராவும் பரப்பி 2,500 பேரை பலிவாங்கியுள்ளது. 2 இலட்சத்துக்கும் மேலான மக்கள் பலபாதிப்புக்களுக்கும் உள்ளாகி நகரைவிட்டு இடம்பெயர்ந்தனர். இதில் பலர் கண்ணிழந்தவர்களாகவும் நுரையீரல் பாதிப்படைந்தவர்களாகவும் ஆகியுள்ளனர். உரையாத நிவாரண வேலைகளில் ஈடுபட்ட இந்திய அரச மருத்துவ சிகிச்சைகள், நகரிலிருந்த விஷவாயுவை அகற்றும் செயல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க இலவச சட்ட உதவி ஆகியவற்றை துரிதமாகவே செய்துள்ளது. உலகின் பெரும் முதலாளித்துவ நிறுவனங்களில் ஒன்றான யூனியன் காபைட் உலகெங்குமுள்ள தனது தொழிற்சாலைகளில் 105,000 தொழிலாளர்களையும் தனது வருட 10 பில்லியன் டொலர்களையும் கொண்ட பெரும் சுரண்டல் நிறுவனமாக விளங்கி போபால் விபத்து மூலம் ஓர் விழிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வன்முறையாம்! U.P.I இன் புதிய கண்டுபிடிப்பு

ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீதான சர்வதேச செய்தித் தொடர்புச் சாதனங்களின் அணுகுமுறைகள் சரிந்து கொண்டே வருகின்றன. இந்த முதலாளித்துவ தொடர்புச்சாதனங்கள் இன்று தங்களைத் தாங்களே தோலுரித்துக் காட்டிக் கொண்டுள்ளன. குறிப்பாக, ஆங்கில நாளேடுகளின் 'பார்வைகள்' இலங்கைத் தமிழ் பேசும் மக்களையும், அவர்கள் மீது அனுதாபம் கொண்ட மனிதாபிமானிகளையும் சுட்டெரிக்கிறது.

கடந்த மாதம் செய்திப் பரிவர்த்தனை உலகில் ஒரு புதிய கண்டுபிடிப்பு நடந்திருக்கிறது.

அந்தக் கண்டுபிடிப்பைச் செய்தது - அமெரிக்க செய்தி விற்பனை முகவர் நிலையங்களில் ஒன்றான 'யுனைற்றட் பிறெஸ் இன்ரர்நேஷனல்' (U.P.I)

இலங்கையில் ஈழப் போராளிகளால் முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டத்தை 'தமிழ் வன்முறை' (TAMIL VIOLENCE) என அது கண்டுபிடித்திருக்கிறது.

கடந்த மாதம் கொக்கிளாய், நாயாறு ஆகிய இடங்களில் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பான U.P.I இன் செய்தியை 1.12.1984 INTERNATIONAL HERALD TRIBUNE, தனது முதல் பக்கத்தில் - இலங்கை வரைபடத்துடன் பிரசுரித்தது.

அச் செய்தியில் - "முழு இலங்கையையும் உள்ளடக்கிய [illegible] அரச பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலயம் ஒன்றையும், நடைசெய்யப்பட்ட வலயம் ஒன்றையும் உருவாக்கியிருப்பது, 'தமிழ் வன்முறையை அடக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு அந்நிய நாளேடுகள் இதுவரைகாலமும் கொடுத்து வந்த பெயர்கள் 'பிரிவினை வாதிகளின் வன்முறை', 'கொரில்லாக்களின் வன்முறை', 'தமிழ்ப் பயங்கரவாதிகளின் வன்முறை' என்பனவாகும்.

ஆனால் தற்போது 'தமிழ் வன்முறை' என்ற புதுப் பிரயோகத்தின் மூலம் - செய்திப் பரிவர்த்தனைக்கு ஒரு 'புதிய பரிமாணத்தை'ச் சேர்த்திருக்கின்கள்.

இந்தப் புதிய கண்டுபிடிப்பின் நோக்கம் - முழுத் தமிழ் மக்களையும் வன்முறை விரும்பிகளாகக் காட்ட வேண்டும் என்பதாகும். எனவேதான் பத்திரிகைச் சுதந்திரத்தின் தார்மீக நியதிகளை முற்றாக மறந்து - ஏகாதிபத்தியத்தின் கால்களை நக்கி உண்மைக்கு சாவுமணி அடிக்கும் பணியைத் தொடங்கியிருக்கிறது U.P.I.

இலங்கையில் வன்முறை 'விஸ்வரூபமாக' நடைபெறுகிறது. அதாவது - இலங்கை அரசு - திட்டமிட்ட முறையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான வன்முறைகளை வாரந்தோறும் கட்டவிழ்க்கின்றது. தினமும் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்படுகின்றனர். இவைகள் எதுவுமே U.P.I இன் கண்களின் முன் 'அரச பயங்கரவாதமாக'த் தென்படாதது விசித்திரமே!

U.P.I இன் கண்டுபிடிப்பு அதனை நமக்கு 'இனம்' காட்டியிருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் மீதான 'அரச பயங்கரவாதத்திற்கு' எதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் இயக்கங்களால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளிற்கு 'தமிழ் வன்முறை'என மகுடமிட்டு, முழுத் தமிழ் மக்களையும் வன்முறையுடன் பின்னிப் பிணைத்திருக்கிறது U.P.I. இது ஒரு திட்டமிட்ட வரலாற்றுச் சதி. தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரச்சார நடவடிக்கைகளின் ஒரு பகுதி. ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சரிக்கத் தோண்டப்படும் பொறிக் கிடங்கு.

இதே வேளையில் U.P.I இன் செய்தி அறிக்கையை ஆதரிப்பது போல பிரெஞ்சுத் தொலைக் காட்சிச் சேவையும் இயங்கியிருக்கிறது. கொக்கிளாய், நாயாறு சம்பவங்களிற்குப் பின் - சிறீலங்கா அரசு நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவித்துள்ளது. ஆனால் பிரெஞ்சுத் தொலைக் காட்சி நிறுவனத்தின் முன் அவை செய்திகளாக எடை போடப்படவில்லை.

சிறீலங்கா அரசின் அடக்குமுறையை மட்டும் அல்ல - சர்வதேச செய்தித் தொடர்பு ஸ்தாபனங்களின் கொடுமையான 'பிரச்சார அடக்குமுறை'யையும் எதிர்த்துப் போராட வேண்டிய பொறுப்பு இன்று ஈழ மக்களைச் சார்ந்து இருக்கிறது.

- கே. கே. மோகன் -

---

சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய் நமது சோவியத் குடியரசு நடத்தும் புரட்சிகரப் போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு தான் கீழ்த்திசை மக்களின் புரட்சிகர இயக்கம் இப்பொழுது பயனுள்ள முறையில் வளர முடியும். வெற்றிகர முடிவை எய்த முடியும்.

- தோழர் லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் காலத்து நட்சத்திரம் லெனின்

இந்தப் பூகோளத்தின் மேற்பரப்பெங்கும் மாறுபட்ட வேதனைகளிற்கும், அறியாமைகளுக்கும் அடிமைப்பட்டு இருந்த இருண்ட காலகட்டத்தில் எழுந்த தீபம் இவன். உலகனைத்திலும் உள்ள உழைக்கும் மக்களின் தலைவன் — விடுதலை வேண்டி நிற்கும் மக்களின் ஆசான் — மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோரின் புரட்சிகரப் போதனைகளை மேதைமையுடன் தொடர்ந்தவன். இவன்தான் விளாடிமீர் இலியீச் உலியானவ் என்ற லெனின். இந்த யுகப்புரட்சியின் நாயகனைப் பற்றி, அவனுடைய வாழ்க்கையைப் பற்றி, இன்று புரட்சி வேள்வியை நடத்திக் கொண்டிருக்கும் ஈழமக்கள் அனைவரும் கட்டாயமாக அறிய வேண்டிய காலகட்டம் இது.

தான் பிறந்த மண்ணையும், மக்களையும் எவ்வளவுக்கு நேசித்தான் என்பதற்கு அடையாளமாக சைபீரியாவை வளமாக்கி ஓடும் ஒரு நதியின் பெயரையே தனது புனைப்பெயராக லெனின் என இட்டார். 1870ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஸிம்பீர்ஸ்க் என்னும் நகரில் பிறந்தார். இந்த நகர் ரூஷியாவின் மிகப்பெரிய நதியான வோல்காவின் கரையை அண்டியுள்ளது. இவருடைய இளமைப்பருவம் இந்த ஆற்றை ஒட்டிய நீர்ப்பரப்புக்களிலேயே கழிந்தது. இவரது தாய் மரியா அலெக்ஸாண்ட்ரோவ்னா ஒரு மருத்துவரின் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவராவர். அவர் அநேக அயல் மொழிகளை அறிந்திருந்தார். அறிவுக் கூர்மையும், நிதானமும், இனிய இயல்பும் கொண்ட அவர் குழந்தைகளைப் பயிற்றுவித்து வளர்ப்பதற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். இவரின் தந்தை இலியா நிக்கொலயெவிச் உலியானவ் [illegible]த்தந்தையது என்பதை சிறுவயது முதல் உணர்ந்து கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நடுத்தரக் கல்வி நிலையங்களில் ஆசிரியராகவும், மக்கள் கல்வி நிலையங்களில் பார்வையாளராகவும் பணியாற்றினார். இவர் தமது காலத்தில் மிகவும் முற்போக்குச் சிந்தனையாளராகத் திகழ்ந்தார். இத்தம்பதிகளின் அலெக்ஸாந்தர், விளாதிமிர், ஓல்கா, திமித்திரியா, மரியா என்ற ஆறு குழந்தைகளும் புரட்சிக்காரர்களாக மலர்ந்தது தற்செயலானது அல்ல.

லெனின் வேடிக்கையும் பிரியமும் களிப்பும் குதூகலமும் கொண்ட சிறுவராக வளர்ந்தார். கூச்சலும் கும்மாளமும் கொண்ட விளையாட்டுக்களை அவர் விரும்பினார். அந்த சிறிய வயதிலேயே நிறையப் படித்தார். லெனின் மீது பெருத்த செல்வாக்கு செலுத்திவந்தார் அலெக்ஸாந்தர் என்ற அவருடைய தமையனார். ஏதேனும் ஒரு சமயத்தில் எப்படி நடந்து கொள்வாய் எனக் கேட்டபோது எல்லாம் அலெக்ஸாந்தர் போலென்று லெனின் பதிலளிப்பார். அலெக்ஸாந்தர் பீட்டர்ஸ்பார் பல்கலைக் கழகத்தில் பயின்று வந்தார். பெரும் விஞ்ஞானியாக அவர் விளங்கியிருக்கக் கூடும். ஆனால் ஜார் மன்னனின் சர்வாதிகாரத்திற்கெதிராக மக்களை மேம்படுத்துவதற்காக புரட்சிப் போராட்டம் நடத்தும் வழியை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார். மார்க்சிச இலக்கியம் பற்றி தன் அண்ணனிடம் இருந்துதான் லெனின் கற்றுக் கொண்டார்.

அந்தச் சிறுவயதிலேயே லெனின் கொடுந்துயரங்களை அனுபவிக்க நேர்ந்தது. 1886ஆம் ஆண்டு அவரது தந்தை திடீரென இறந்தார். இவ்வதிர்ச்சி நீங்குமுன் ஜார் மூன்றாவது அலெக்ஸாந்தரைத் தாக்குவதற்கான ஆயத்தங்களில் பங்கு கொண்டதற்காக 1887ஆம் ஆண்டு மார்ச் மாத முதலில் லெனினின் அண்ணன் அலெக்ஸாந்தர் மரணதண்டனைக்கு உள்ளானார். தமையனாரின் மரணதண்டனை புரட்சிப் போராட்டத்தில் குதிப்பதற்கு லெனினிற்கு மேலும் ஒரு உந்துதலை அளித்தது. 1887 டிசம்பரில் மாணவர்கள் கூட்டத்தில் பங்கு கொண்டதற்காக லெனின் பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இவ்வாறு இவர் தமது 17 வயதில் புரட்சிப் போராட்டப்பாதையில் காலடி எடுத்து வைத்தார். புரட்சி இயக்கத்துள் லெனின் அடியெடுத்து வைத்த காலத்தில் மார்க்சீய கொள்கைவாதம் மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் அதிக செல்வாக்கைப் பெற்று விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ருசியாவிலும் பரவத் தொடங்கியிருந்தது. 1889ம் ஆண்டு மே மாதம் லெனின் சமாரா கோபானியா என்ற நகருக்கு குடும்பத்தோடு வந்து சேர்ந்தார். அங்கு 4½ ஆண்டுகள் வாழ்ந்தார். இக்காலத்தைப் பின்பு அவர் நினைவு கூரும்போது "இக்காலத்தில் அதிகாலை தொடங்கி இரவு வெகுநேரம்வரை ஒரே ஆவேசத்துடன் படிப்பேன்" எனச் சொல்லுவார். எதைக் கையாளுவதன் மேல் ருசிய மக்கள் விடுதலை பெறமுடியுமோ அந்தச் சித்தாந்தம் மார்க்சிசமே என இளைஞர் லெனின் கண்டார். மார்க்சின் பிரதான நூலான 'மூலதனம்' என்ற நூலை அவர் ஆழ்ந்து கற்றார். தமது கல்வியை மேம்படுத்திக் கொள்வதற்காக லெனின் தொடர்ந்து பாடுபட்டார். அலாக்காயெவ்கா என்னும் இடத்தில் தோட்டத்தில் எலுமிச்சை மரங்கள் வரிசையாக அடர்ந்த சோலையில் வாங்கிலும் மேசையும் போடப்பட்டு இருந்தன. இவர் இந்த சோலையைத் தெரிந்து கொண்டார். "காலையில் தேனீர் அருந்திய பின் புத்தகச் சுமையும் தானுமாக துளிகூட நேரம் பிசகாமல் அங்கே போய்விடுவார். கண்டிப்புள்ள ஆசிரியர் அங்கே காத்து இருப்பதுபோல பகல்நேர உணவு வரையில் அங்கே தனியாகக் கற்பார்" என்று நினைவு கூருகிறார் லெனினின் சகோதரி.

'குடியானவர்களின் வாழ்க்கையில் புதிய பொருளாதாரக் கொள்கை' என்ற கட்டுரையை சமாராவில் இருக்கும் போதே லெனின் எழுதினார். பாதுகாத்து வைத்திருக்கும் லெனினுடைய முதலாவது கட்டுரை இதுவாகும். தொழிலாளர்களுக்காக ஒரு நல்வாய்ப்புப் பற்றி குறிப்பிட்ட லெனின் 'தொழிலாளர்களுக்கு எடுக்கும் வாய்ப்பை நான் விரும்பியதையும் கனவு கண்டதையும் போல வேறு எதையும் நான் விரும்பவில்லை. வேறு எதையும் நான் கனவு காணவில்லை' என்று உறுதியுடன் சொன்னார். தொழிலாளர்களின் உரிமையற்ற நிலைமையை, முதலாளித்துவவாதிகளால் அவர்கள் சுரண்டப்படுவதை, தொழிலாளர்களின் வறுமை, ஒடுக்கப்பட்ட நிலைமை ஆகியவற்றை அவற்றில் காட்டினார். 1985ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அந்நேரத்தில் ருசியாவின் தலைநகராய் இருந்த பீட்டர்ஸ்பர்க் நகரத்து மார்க்சிய வட்டங்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து அதற்கு 'போராட்ட ஐக்கியம்' என்று பெயரிட்டார். போராட்ட ஐக்கியமே மார்க்சிய புரட்சிக் கட்சியின் முதற்கரு. ஜாராட்சி அரசாங்கம் போராட்ட ஐக்கியத்தின் செயல்களைக் கண்காணித்து அதைக் கடுமையாகத் தாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985 டிசம்பர் மாதத்தில் லெனின் கைது செய்யப்பட்டு 14 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக்குள்ளும் அவர் புரட்சி நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. ஜார் அரசு 1897ம் ஆண்டு 13ம் திகதி லெனினை கிழக்கு சைபீரியாவுக்கு நாடுகடத்துமாறு எனத் தீர்ப்பளித்தது. இங்கிருந்து தான் 'ருசியாவின் முதலாளித்துவ வளர்ச்சி' என்ற நூலை எழுதினார். இந்நூல் மார்க்சின் 'மூலதனம்' என்ற நூலின் நேரான தொடர்ச்சியாக விளங்கியது. முதலாளித்துவத்தைக் கல்லறையில் சேர்க்கப் போவதும் பொதுவுடமை சமூகத்தைப் படைக்கப்போவதுமான தொழிலாளவர்க்கம் முதலாளித்துவ சமூகத்தின் கருவில் எவ்வாறு வளர்கின்றது என அதில் காட்டுகிறார். அந்நேரத் தூரக்குடியிருப்பில் இருந்துகொண்டு தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை கூர்ந்து கவனித்தார். இங்கே தான் இவருக்கு ஏற்கனவே நண்பியான நாதேஸ்தா க்ருப்ஸ்காயாவை வாழ்க்கைத் துணைவியாக்கி, வாழ்வு முழுவதும் நண்பியாகவும் நல்லதுணையாகவும் விளங்கினார். விடுதலை பெற்றதுடன் பீட்டர்ஸ் பார்க்கிற்கு அருகிலே வசிப்பதற்கே லெனின் திட்டமிட்டார். ஆனால் பல்வேறு தடைகளினால் 1900ம் ஆண்டு யூலை 16ம் திகதி அவர் ஜேர்மனி போய் சேர்ந்தார். இவ்வாறு இவரது முதலாவது ஐந்தாண்டு வாழ்க்கை ஆரம்பமானது. இங்கிருந்தே 'இஸ்க்ரா' <தீப்பொறி> பத்திரிகையை லெனின் ஆரம்பித்தார். இஸ்க்ரா லெனினுடைய செல்லக் குழந்தையாக விளங்கியது. இஸ்க்ராவிலிருந்து பெருந்தணல் மூண்டு எரியும் என்ற சொற்களுடன் இவ்வொரு இதழும் வெளியாகின. 'என்ன செய்ய வேண்டும்' என்ற நூலை 1902ம் ஆண்டு லெனின் வெளியிட்டார். கட்சி அமைப்பதில் மிகப் பெரிய பங்கு ஆற்றியது இந்நூல். 'நாட்டுப்புற ஏழைகளுக்கு' என்ற நூலை 1903ம் ஆண்டு வெளியிட்டார். ஜேர்மனியில் இருப்பது ஆபத்து என அறிந்து 1902ம் ஆண்டு ஏப்ரல் லண்டன் போய்ச் சேர்ந்தார். லண்டனில் இருக்கும் போது நூல்நிலையங்களில் இவரது வாழ்க்கை கழிந்தது. 1903ம் ஆண்டு மீண்டும் இஸ்க்ராவை நடத்துவதற்காக ஜேர்மனி வந்து சேர்ந்தார்.

- செல்வம்

- தோழர் லெனினைப் பற்றிய இக்கட்டுரை அடுத்த இதழில் முடிவு பெறும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குருத்துக்கள் வாழ ஓரணி திரள்வோம்.

பசுமை நிறைந்த எங்கள் ஈழத்திருநாடே
பனைகள் செறிந்த எங்கள் பணம்கொழிக்கும் நாடே
மீன்கள் பாடிவரும் மிடுக்குக் கொண்ட நாடே
நாங்கள் உன்னைக் காக்கத் தயங்கிவிடுவோமோ? கூறு

தலைவர் என்று கூறி நாம் வளர்த்த செம்மல் இன்று
மறைவர் என்று எண்ணியோ மலர்கள் தூவினோம் அன்று
பகைவர் பலம் கண்டு பறந்துவிட்ட வீரர் அவர் - நின்று
புகைவர் இப்போ வலம் கொண்ட எம் படை கண்டு

ஈழம் எங்கும் இன்றும் கேட்கிறது இறப்போரின் ஓலக்குரல்
இது கண்டும் இல்லை எம் அரசியல் தலைவர்களின் சீற்றக்குரல்
வாழ வேண்டிய எம் வழித்தோன்றல் யாவும், வதைபட்டு
விழி பிதுங்கி, இறக்கும் காலம் வந்ததோ இன்று எமக்கும்

வீட்டுக்கு ஒருவனை இப்போது அழைத்தனர் எம் தலைவர்
நாட்டுக்கே நாம் என யாவரும் திரள்கிறார் எம் அணியில்
சிங்களப் படை செய்யும் சீற்றம் தரும் செயல் கண்டு
எங்களின் படை கண்டு எழிதினில் பெருகும் செயல் பெற்றோ

புரட்சி செய்யும் வாலிபரை புகுந்து பிடிக்கத் திறமையற்று
மருட்சி கொண்ட மக்களை மாழவைக்கும் மதியற்ற அமைச்சு
கொடுமை செய்யும் எதிரியை கொன்றழிக்க வழி தெரியாது
கடுமை நடவடிக்கையென வீட்டைக்கொழுத்தும் அறிவாளி
- அன்றோ நீ
புத்தர் போதித்த போதனைகள் அனைத்தும் புகை மண்டிப்போய்
- இன்று
எந்தர் கூட்டம் இன்று எள்ளி நகையாடுகிறது எம் பூமியி
- நின்று எம்
கருத்து வேற்றுமைகளை இனி நாம் சற்று ஒதுக்கி வைத்து
- விட்டு எம்
குருத்துக்கள் வாழ வழி செய்ய ஓரணி திரள்வோம் வாரீர்

" க. ஈஸ்வரன் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தோழர்களே!

ஈழமக்கள் சிந்துகின்ற குருதி இன்று ஈழ தேசத்தில் இரத்த வெள்ளமாகப் பெருக்கெடுத்திருக்கின்ற இந்த இக்கட்டான வேளையில் விடுதலைப் போராட்டமானது நம்மிடையே உள்ள பேதங்களை மறந்து ஒரு புரட்சிகரக் கட்சியினூடாக முன்னெடுக்கப்பட வேண்டியது வரலாற்றுக் கட்டாயமாகிறது. எனவே ஒரு புரட்சிக் கட்சியை அமைக்கும் பணியில் தமிழ் முரசு தனது பங்களிப்பை சிறப்புறச் செய்ய முரசை தேடிப் படியுங்கள்... தொடர்புக்கு...

The Editor.
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



FMLN fighters

# வெற்றியை முத்தமிடும் சல்வடோரின்
# ★ ★ ★ போராளிகள் ★ ★ ★

வெளியீடு: தமிழீழ விடுதலைப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TAMOUL MURASU

TAMIL EELAM EST INEVITABLE

MURASU- 3 OLY- 3

JANVIER - 1985



# TUERIES AVEUGLES À SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

## *LA BATAILLE JURIDIQUE DU PEUPLE TAMOUL*




*A l'heure actuelle, le gouvernement Srilankais déclare une guerre mystérieuse contre la communauté Tamoule. Le terrorisme d'état sans relâche et les actes de banditisme contre les innocents Tamoul ont atteint son point culminant. Le peuple Tamoul que cela soit sur leur territoire traditionnel ou bien ceux se trouvant dans le sud du pays, vivent constamment dans la crainte que le terrorisme d'état ne verse pas leur sang.*

*Durant ces derniers jours, les villes dites Tamoules ont vu le renforcement des forces armées Srilankaises. Ces forces armées opèrent comme en temps de guerre, en détruisant les propriétés Tamoules, en tuant les Tamouls.*

*Le gouvernement déclarait le couvre feu pour une période assez longue, continuellement pour une durée de 61 heures, en considérant les Tamouls comme des prisonniers. Durant les deux dernières semaines des centaines de Tamouls ont été éliminés par les forces armées et par les bandits Singhalais. Des miliers de Tamouls ont été arrêtés et conduits aux camps de torture se situent dans le sud du pays, qui est 400 kilomètres, éloigné de leurs places natales.*

*Les Tamouls de Srilanka ne sont pas seulement privés de leur droit fondamental mais ils sont aussi démunis des nécessités de base, comme nourritures et médicaments. Par cette voie le gouvernement a essayé de démontrer par intermédiaire de la radio et de la télévision autrement dit à la mass médias que le peuple Tamoul est coupable du "terrorisme".*

*Dans cette circonstance, les personnes suceptibles de respecter les droits de l'homme doivent refuser la fausse propagande du gouvernement de Srilanka et reconnaissent la lutte juridique des Tamouls de Srilanka.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LE PROBLEME TAMOUL N'EST PAS RESOLU A LA CONFERENCE DA LA TABLE RONDE

Le gouvernement de Srilanka a fait savoir au monde entier au mois de décémbre 1983, qu'il aura trouvé la solution pour le problème Tamoul à la conférence de la table ronde. A l'heure actuelle le gouvernement n'a pas de volenté à résoudre le problème Tamoul. La conférénce a continué jusqu'à 21.12.1984. Mais il n'y a aucune solution pour le problème Tamoul. En effect le gouvernement a trompé le monde entier. Le gouvernement continue a tuer les Tamouls et detruit leur économie autrement dit il faudrait que les Tamouls renonce à leur projet de libération.

Il n'est pas de résoudre les problèmes par discussion. Mais il est probable de supprimer le combat de libération des Tamouls par le terrorisme militaire.

## ARRESTATION DES TAMOULS SUR LEUR PROPRE TERRITOIRE APRES AVOIR IMPOSE LE COUVRE-FEU DANS LA REGION DU NORD

Le gouvernement a imposé pendant 103 heures, continue, un couvre-feu qui a eu lieu le 8 décembre 1984 à la région du nord. Durant les heures du couvre-feu, les forces de sécurité ont arrêté les innocents Tamouls y compris les femmes se trouvant à la maison. Les Tamouls arrêtés ont été emmenés dans les camps se trouvent dans le Sud (qui est peuplé par les Singhalais). Ces Tamouls ont été employés comme otages chaque fois qu'il y a un attaque provoqué par les combattants pour la libération.

Nombreux gens sont disparus à cause de la famine qui ravage cette région. Mais le gouvernement continu à supprimer les Tamouls. Les forces de sécurité n'hésite pas à tirer sur les personnes se trouvant dans leurs maisons durant les heures du couvre-feu. Pour les Tamouls, il n'y a pas de sécurité, même dans leur propre endroit.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES FORCES DE SECURITE TUENT BEAUCOUP D'INNOCENTS TAMOULS DANS LA COMMUNE DE MANNAR

Depuis le 4 décembre 1984, les forces des sécurité commençait à tuer les innocents gens et à endommager leurs propriétés.

L'armée s'était rendue au bureau de post de Murungan (à Mannar) et tirait sur les gens dont 9 parmi eux ont trouvé la mort.

Un bus venant de Murunkan allant vers Vavuniya a été arrêté par l'armée et 17 personnes y compris le conducteur ont été tués. Un autre bus venant de Vavuniya allant vers Mannar a été arrêté par l'armée et 20 Tamouls parmi les passagers ont été executés par la même armée. En contre parti le gouvernement diffuse une propagande annonçant que les combattants Tamouls de libération tué les innocents Singhalais.

Beaucoup d'innocents Tamouls ont été tués par les forces armées dans les villages tels que Ochivayankulam, Parapankandal, Periyakattu et Mullikulam de Mannar.

## LE GOUVERNEMENT LIMITE LES CIRCULATION DANS LA REGION DU NORD

Le gouvernement a limité les circulations dans la région du Nord. A cause de cette limitation personne ne peut pénétrer ou sortir de la région de Jaffna, sans avoir averti les autorités compétentes. Jusqu'à ce jour le gouvernement n'a pas défini les autorités compétentes. La circulation des véhicules y compris des cycles à pédales à Jaffna a été limitée à savoir:

de 6 H du matin jusqu'à 8 H 30 du matin en arrivant à Jaffna et 14 H 00 jusqu'à 16 H 00 en quittant Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A cause de cette limitation, la population ne vit plus dans cette région car même se promenant ils ne peuvent pas.

## LES ARMES A FEU ONT ETE AUTORISEES AUX SINGHALAIS FAISANT PARTI DES COLONIES IMPLANTEES DANS LES REGIONS TAMOULES

Le gouvernement accorde les armes à feu aux Singhalais implantés dans les régions Tamoules. Ces Singhalais harcèlent les innocents Tamouls dans ces régions. Ils ont chassé les Tamouls de leurs maisons et ils prennent ces maisons en leur possession. Les tamouls refusant quitter leurs maisons ont été tués par les Singhalais. La plus part des victimes sont d'origine de Trincomalee et Vavuniya. Le gouvernement trouve ce moyen de chasser les Tamouls de leur territoire traditionel en implantant les colonnies Singhalaises dans ledites régions.

Par ce moyen le gouvernement diminue le nombre de Tamouls et en même temps il détruit la nation Tamoule.

## ZONE DE SECURITE

Le gouvernement a établie une zone de sécurité dans le nord du pays à partir du 30 novembre 1984. Concordant à ce règlement, il a été aussi établi une zone dite: "Zône interdite". Selon cette législation, personne ne peut pénétrer dans cette zône interdite sans autorisation. Cette zône interdite comprend les six îles principales à savoir:

Eluvaitivu, Analaitivu, Nainativu, Delft, Palaitivu et Iranaitivu.

Une zône côtière s'étend de Mullaitivu jusqu'à Mannar et puis la grande route de 25 miles allant de Punnalai jusqu'au Point Pedro. Les personnes habitant cette zône seront déplacées dans les sept jours qui suivent la parution de ce règlement.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LES PECHEURS SONT EMPECHES D'ALLER PECHER

Selon le noveau règlement dicté par le gouvernement, les pêcheurs du département du nord ne sont pas autorisés d'aller pêcher dans le mer du nord. Il est à rappeler que la plus part de la population de la région du nord peuplant les côtés ne vivent que par la pêche, le travail le plus profitable de cette région. A cause de cette interdiction 50 000 familles sont prévus de leur pain quotidien. Aussi les bateaux de pêche ont été detruits par l'armée. Le gouvernement de Srilanka mène une politique active en supprimant lentement mais sûrement l'économie mené par les Tamouls. Par ce même agissement le gouvernement essaye de supprimer les Tamouls par les laisser mourir de faim.

Ils ne pouvaient pas mettre leur pied dehors. En bref, ils ne pouvaient effectuer aucun travail dans cette région. Pour utiliser les véhicules, ils devaient obtenir l'autorisation des autorités compétentes. Celle-ci est également valable pour conduire une ambulance.

Les couleurs différentes ont été attribuées aux différentes routes et celles-ci doivent être empruntées par telle ou telle véhicule de la même couleur. A cause de cette limitation la vie des Tamouls est en grande danger. Le gouvernement essaye de supprimer les Tamouls en même temps que leur lutte pour la libération de diverses manières.

## PILLAGE CONTINUEL PAR LES FORCES ARMEES DANS LES REGIONS TAMOULES

Les forces de sécurité ont perquisitionné les maisons dans les régions Tamoules y compris Jaffna, Mannar, Batticoloa, Vavuniya et des hauts-pays.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ils ont arrêté nombreux Tamouls, aussi bien des femmes sans tenir compte de leur âges. Ils ont été conduits dans les camps militaires et des divers harcèlement leur ont été atribués. Les jeunes Tamouls sont torturés et puis tués dans ledits camps. Les jeunes filles Tamoules ont été enlevées sous la menace de fusil. Les autres sont detenues sans raison dans les camps comme otages.

Le gouvernement a essayé de supprimer le combat pour la libération en tuant les Tamouls sur leur propre territoire et ainsi détruit la culture Tamoule.

## UN PRETRE METHODISTE ET DEUX AUTRES PERSONNES ONT PERI AVEC VEHICULE DANS LES FLAMMES

Le 13 décembre 1984, un prêtre Methodiste, Rev. G.N.Jeyarajasingam, son chauffeur musulman M.Abdul-Cadar Sulaiman et un agent de police tamoul M.Jesuthasan ont peri sous la flamme de l'armée avec leur véhicule. Leur véhicule a été arrêté par l'armée pendant qu'ils venaient de Mannar allant à Murungan. Immédiatement le véhicule et ses occupants ont été mis à feu par l'armée. L'armée continue à supprimer les responsables Tamouls même dans le domaine réligieux sans tenir compte de la position de la personne.

POUR TOUTES LES CORROSPONDANCES

L'EDITEUR
TAMOUL MURASU
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM
10,RUE DES MARTYRS
75009-PARIS
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Brigades de solidarité



# NICARAGUA

PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org